# தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்

என்.வி.நடராசன் மாளிகை,170, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

**கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் 2026-27 ஆம் ஆண்டு முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் இணையவழி மூலம் மட்டுமே வரவேற்கப்படுகின்றன.**

**பயிற்சிக்காலம்: 1வருடம்**
**2 பருவ முறைகள்**

**தகுதிகள்**

**முதல் பருவம்: 6 மாதங்கள்**
**இரண்டாம் பருவம் : 6 மாதங்கள்**

- கல்வி தகுதி : குறைந்தபட்ச கல்வி தகுதியாக +2 தேர்ச்சி அல்லது 10+2+3 முடித்த பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு வழங்கப்படும்.
- 01.07.2026 அன்று குறைந்தபட்சம் 17 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு இல்லை.
- கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி தமிழில் மட்டுமே பயிற்றுவிக்கப்படும்.
- பயிற்சிக்கான தேர்வுகளை தமிழில் மட்டுமே எழுத வேண்டும்.
- இப்பயிற்சிக்கு அதிகாரபூர்வ இணையதளமான **www.tncu.tn.gov.in** மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- பயிற்சிக்கு 08.06.2026 அன்று முதல் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.
- இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அதற்கான சான்றிதழ்கள் மற்றும் புகைப்படம் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.
- விண்ணப்ப கட்டணம் ரூ.100/-ஐ இணையவழி (Billdesk Payment Gateway) மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட மேலாண்மை நிலையங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனில் தனித்தனியே இணையவழியில் ரூ.100/- விண்ணப்ப கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 20.07.2026 அன்று பிற்பகல் 5.00 மணி வரை மட்டும். அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- பயிற்சிக்கான கூடுதல் விவரங்கள், வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் இணையதள முகவரி **www.tncu.tn.gov.in** மூலம் தெரிந்துகொள்ளலாம்.
- இணையவழி மூலம் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- இணையவழியாக அல்லாமல் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு விண்ணப்பித்தால், அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- பயிற்சிக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பயிற்சியில் சேர்வதற்கு தகுதி பெற்றவர்கள் விவரம் பயிற்சி நிலையங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.
- பயிற்சியில் சேர்வதற்கு தேர்வு செய்யப்படும் பயிற்சியாளர்கள் சம்மந்தப்பட்ட பயிற்சி நிலையத்திற்கு உரிய ஆவணங்களுடன் நேரடியாக சென்று பயிற்சியில் சேர்ந்துக்கொள்ள வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சிக்கான கட்டணம் ரூ.20,750/-ஐ முழுவதும் ஒரே தவணையில் இணையவழி மூலமே (Billdesk Payment Gateway) செலுத்த வேண்டும்.

**செ.ம.தொ.இ/524/வரைகலை/2026**